[19th April 1960

Sri S. M. ANNAMALAI : ஸார், இந்தப் பரிசுகள் வழங்கப்படுவது ஒரு சென்ட் நிலத்தில் எவ்வளவு நெல் விளைந்ததோ அதைக் கொண்டு அதிக விளைச்சல் விளைந்ததாகக் கணக்கிட்டு வழங்கப்படுகிறது. ஆனால் கிராமப்புறத்தில் ஒரு சென்ட் நிலத்திற்கு பதிலாக இரண்டு சென்ட் நிலத்தில் விளைந்த பயிர்களைக் காட்டி கணக்கிடப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படியானால் அதைக் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ஒரு செண்டும், இல்லை, இரண்டு செண்டும் இல்லை. குறைந்தது 50 சென்ட் பிளாக்கில் போட்டி வைக்கப்படுகிறது. அந்தப் போட்டியில் யார் அதிகமாக விளைவித்துக் காட்டுகிறார்களோ அவர்களுக்கு பரிசு வழங்கப்படுகிறது.

Sri K. B. S. MANI : ஸார், அண்மையில் ஆடுதுறையில் கொடுக்கப்பட்ட பரிசுகள் கூட சிறு நிலச்சுவாந்தார்களுக்கும் கொடுக்கப்பட்டது. சிறு நிலச்சுவாந்தார்கள் தான் விவசாயிகளா ? விவசாயிகள் என்பதற்கு எந்த விதத்திலே பொருள் வைத்திருக்கிறார்கள்?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் என்ன தெரிந்துகொள்ள விரும்புகிறார் என்றே எனக்குத் தெரியவில்லை.

Ticketless travel

* 720 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of persons convicted in the State for ticketless travel;

(*b*) the total expenditure incurred on their behalf;

(*c*) whether the Government of India bear these expenses; and

(*d*) the expenditure incurred in 1957, 1958 and 1959 ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) 1957—Rs. 19,050.
1958—Rs. 15,935.
1959—Rs. 16,698.

(*b*) 1957—Rs. 62,737.75.
1958—Rs. 70,946.83.
1959—Rs. 61,432.83.

(*c*) No, Sir.

(*d*) Please see answer to clause (*b*).

Sri V. K. KOTHANDARAMAN: ஸார், இதனால் வரக்கூடிய லாபத்தை மத்திய சர்க்கார் அடையும்போது, அந்த லாபத்தைப் பெருக்குவதற்காக ஏற்படக்கூடிய செலவு பூராவையும் ராஜ்ய சர்க்கார் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலைமை ஏற்படுமானால், ராஜ்ய சர்க்காருக்குப் போதுமான வருவாய் இல்லை என்று சொல்லக்கூடிய நேரத்தில் அதையும் மத்திய சர்க்காரையே கொடுக்கும்படி வற்புறுத்துவார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : லாபம் என்பது ஒன்றும் இல்லை. குற்றங்கள் தவிர்க்கப்படவேண்டுமென்பது தான் இதில் பிரச்னை. எந்தச் சட்டத்தின் கீழ் குற்றம் செய்தாலும், அதன் மீது சர்க்கார் நடவடிக்கை எடுத்து, கோர்ட்டுகளுக்குக் கொண்டு போய் கோர்ட்டுகள் முடிவு தெரிவிக்கின்றன. அதற்குச் செலவு ஆகின்றது.

19th April 1960]

Sri S. NAGARAJA MONIGAR : இந்தக் குற்றங்களைப் புரிகின்றவர்கள் நமது ராஜ்யத்திலுள்ள பிரஜைகளாகையினால், மத்திய சர்க்காருக்கு அநாவசியமாக செலவு ஏற்படுத்துவது நியாயம் ஆகுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : மத்திய சர்க்காருக்கென்று தனியாக பிரஜைகள் இல்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

Sri A. A. RASHEED : May I know whether separate Railway courts have tried or only our courts have tried these ticketless travellers ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I would like to have notice to give a full answer. But there are Railway Magistrates who try cases relating to Railways.

Sri S. M. ANNAMALAI : ஸார், இதில் அபராதம் விதிக்கப்பட்ட தொகை எவ்வளவு? எவ்வளவு பேர்கள் சிறைக்கு அனுப்பப்பட்டார்கள் என்று சொல்ல முடியுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதைப் பற்றி தனிக் கேள்வி வேண்டும்.

Zoological Gardens

* 721 Q.—Sri P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்யத்தில் எந்தெந்த இடங்களிலே 1959-60-ம் ஆண்டில் மிருகக் காட்சி சாலைகள் அமைக்கப்படும் ?

(ஆ) இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலேயே எந்தெந்த இடங்களிலே மிருகக் காட்சி சாலைகள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கின்றன?

(இ) இரண்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் இதற்காகச் செலவிடப்பட ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Nil.

(*b*) Nil.

(*c*) Does not arise.

Restoration of certain railway lines

* 722 *Q.*—Sri S. NAGARAJA MONIGAR : Will the Hon. Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have recommended to the Union Government to relay the dismantled: (1) Tirupathur-Krishnagiri and (2) Morappur-Hosur Railway lines;

(*b*) if so, whether it is with the modifications like connecting Hosur, Bangalore and Krishnagiri-Palacode *via* Kaveripatnam;

(*c*) when they recommended and with what result; and

(*d*) whether it is the first time that the State Government have recommended ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) No, Sir.

(*c*) & (*d*) The restoration of these two lines was recommended to the Government of India in 1944 and 1947-48 but has not been pursued as a proposal was made in 1953 for providing a direct line